# ஆண்டறிக்கை

# 2022/2023

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

**தலுப்பிட்டிய வீதி, ஹுணுப்பிட்டிய, வத்தளை**

**தொலைபேசி : 011-2948102/03, 011-2941859**

**தொலைநகல் : 011-2930252, 011-2949126**

**மின்னஞ்சல் : ccffinance@yahoo.com**

**இணையத்தளம்: www.ccfl.gov.lk**

| | உள்ளடக்கம் | பக்க இல |
|---|---|---|
| **1** | **நிறுவனத் தகவல்கள்** | |
| 1.1 | தொலைநோக்கும் செயற்பணியும் | 01 |
| 1.2 | எமது கம்பனியின் பெறுமதிகள் | 02 |
| 1.3 | எமது பயணத்தின் முக்கியமாக கட்டங்கள் | 03 |
| 1.4 | தலைவரின் மீளாய்வு | 05 |
| 1.5 | கம்பனியின் ஒழுங்கமைப்பு வரைபடம் சிரேஷ்ட ஆளுகை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 07 |
| 1.6 | பணிப்பாளர் சபையும் நிர்வாக சபையும் | 08 |
| 1.7 | நிறுவனத்தின் நல்லாளுகை | 09 |
| 1.8 | நிறுவனத்தின் நல்லாளுகை நோக்கி கம்பனியின் பங்களிப்பு | 10 |
| | | |
| **2.** | **இடர் முகாமைத்துவம்** | 11 |
| | | |
| **3.** | **செயலாற்றல் தரவு** | 14 |
| | | |
| **4.** | **பௌதீக இலக்கு மற்றும் நிதி முன்னேற்றம 2023** | 17 |
| | | |
| **5.** | **கம்பனியின் தரப்பினர்களுக்காக கம்பனியின் பங்களிப்பு** | 18 |
| | | |
| **6.** | **உர விநியோகத்தின் செயற்பாடுகள் சுருக்கமாக** | 19 |
| | | |
| **7.** | **கம்பனியின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு** | 21 |
| | | |
| **8.** | **நிதி அறிக்கையிடல்** | |
| 8.1 | பணிப்பாளர் பொறுப்புக்கூறல் கூற்று | 23 |
| 8.2 | தலைவரினதும் நிதி முகாமையாளர்களினதும் பொறுப்புக் கூற்று | 24 |
| 8.3 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை | 25 |
| 8.4 | விபரமான வருமானக் கூற்று | 32 |
| 8.5 | நிதி நிலைமைக் கூற்று | 33 |
| 8.6 | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று | 34 |
| 8.7 | காசுப்பாய்ச்சற் கூற்று | 35 |
| | • நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் | 36 |
| | | |
| **9.** | **கூட்டமைப்புத் தகவல்கள்** | 61 |

**1.1**

## தூர நோக்கு

“கமநலத்திற்கு அவசியமான பொருட்களையும்
சேவைகளையும்
தாமதமின்றி உற்பத்தி செய்து விநியோகிப்பதில்
இலங்கை கமநலத் துறைக்கு சாதகமான முறையில்
பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம்
அரசாங்கத் துறையில் உள்ள முன்மாதிரியான
நிறுவனமாக செயற்படுதல்”

## செயற்பணி

இலங்கையில் முன்னனி உர உற்பத்தியாளராகவும்
விநியோகத்தராகவும் திகழ்ந்து
அரசாங்கத்தின் கமநலத்திற்கான தூர நோக்கில்
பெருமைவாய்ந்த உரிமையாளராக
உற்பத்தியைப் பரவலாக்கி,
உயர் தரத்திலான உற்பத்தியை வெளிப்படுத்தி,
நிறுவகத் தரப்பினரின் தேவைப்பாட்டிற்கு
ஏற்றவகையில் செயற்பட்டு
சுதந்திர நிறுவகமாக செயற்படுவதற்கான
சந்தர்ப்பத்தை உருவாக்குதல்

## 1.2 எமது கம்பனியின் ஒழுக்க விழுமியங்கள்

| நேர்மைத்தன்மை | பொறுப்பு | பரஸ்பர மரியாதை |
|---|---|---|
| எல்லாச் சந்தர்ப்பங்களிலும் திறந்த மனதுடன் செயற்படல் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு கட்டுப்படல். | எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் உறுதிகளுக்கும் பொறுப்புக் கூறல். | ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்தல், சமத்துவம், தனி நபர் அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் முன்னேற்றங்களை அங்கீகரித்தல். |

| சிறந்த பிரஜை | தரம் | குழு முயற்சி |
|---|---|---|
| சட்டத்திற்கு அடிபணிதல், சமூக நலனுக்காக பங்களிப்புச் செய்தல் மற்றும் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும ான சூழல் பொறுப்பு. | நிறுவனத்தின் அனைத்து கருமங்களிலும் முடிவுகளிலும் உயரிய தரத்தினை பாதுகாத்தல். | நிறுவனத்தின் பொது இலக்காகிய ‘‘முன்னேற்றம்’’ நோக்கி கூட்டாக பயணிப்பதற்கான தனிப்பட்ட ஈடுபாடு. |

## 1.3 எமது பயணத்தின் முக்கியமான கட்டங்கள்

**1872**

- இலங்கையில் தனது வியாபார நடவடிக்கைகளை பேணிச்செல்லும் வகையில் கம்பனி பெரிய பிரித்தானியாவில் கூட்டிணைக்கப்பட்டது.

**1976**

- 1971 இன் 35 ஆம் இலக்க வியாபாரத்தை கையளிக்கும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கம்பனி இலங்கை அரசினால் பொறுப்பேறக்கப்பட்டது.
- கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி அரசிற்கு பொறுப்பேறகப்பட்டதன் பின் அரசாங்க வியாபாரமாக கொண்டு நடாத்தப்பட்டது.

**1989**

- 1987 இன் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபன மற்றும் வியாபாரங்கள் பொது வியாபாரமாக மாற்றும் சட்டத்திற்கு இணங்க கம்பனி பொது வியாபாரமொன்றாக மாற்றப்பட்டது.
- கம்பனியின் பெயர் பெயர் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என மாற்றப்பட்டது.
- கம்பனியின் முழு பங்கு உரித்தும் அரசிற்கு சொந்தமாக இருந்தன.

**1994**

- அரசினால் மேற்கொள்ளப்பட்ட தனியார் மயப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் கம்பனி தனியார் மயப்படுத்தப்பட்டது. கம்பனியின் பங்கு மூலதனத்தில் 90% தனியார் முகாமைத்துவத்திற்கும் எஞ்சிய 10% பொது திறைசேரிக்கும் உரித்தாகின. எனினும் நிர்வாக செயற்பாட்டில் ஏற்பட்ட சிக்கல் மற்றும் ஊழியர்களின் கடும் எதிர்ப்பினால் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இரண்டு வருட காலமாக தடைப்பட்டிருந்தது.

**1997**

- 1996 இன் 23 ஆம் இலக்க பொது முயற்சிகளை மீளமைத்தல் அதிகாரச்சட்டத்தின் கீழ் தகுதி வாயந்த் அதிகாரியொன்றை அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டு திறைசேரியால் மீள கையேற்கப்பட்டது.
- கம்பனியின் தலைமையகம் யூனியன் பிளேஸ் என்ற இடத்திலிருந்து தற்போதைய இடமான வத்தள ஹுணுப்பிட்டியக்கு கொண்டு செல்லப்பட்டது.

**2005**

- மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மானிய விலைக்கு உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

**2010**

- ஏனைய பயிர் செய்கைகளுக்காக மானிய உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

**2011**

- தகைமை வாய்ந்த அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்த கம்பனியின் நிர்வாகம் பணிப்பாளர் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**2016**

- அரசினால் பெப்ரவரி மாத இறுதியில் தற்போதைய உர மானிய முறைமைக்குப் பதிலாக மாற்று நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் கம்பனி போட்டியுடனான திறந்த சந்தையில் நுழைந்து வியாபாரத்தை மேற்கொண்டு வந்தது.

**2018**

- திறந்த சந்தை நிலைமைகளின் கீழ் மானிய உர விநியோகம் மீண்டும் தொடங்கப்பட்டது.

**2021**

- அரசு உரக் கொள்கையில் மாற்றம் இரசாயன உரங்களை பயன்படுத்துவதை தடை செய்தல் மற்றும் உள்ளூர் இயற்கை உரங்களை ஊக்குவித்தல்.

**2023**

- இரசாயன உரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் நீக்கியது மற்றும் நிறுவனம் இரசாயன உர விநியோகத்தை நோக்கி தனது நடவடிக்கைகளை மீண்டும் மாற்றியுள்ளது

**2023**

- சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் என்ற அரசுக்கு சொந்தமான பிற உர நிறுவனத்துடன் நிறுவனத்தை இணைப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

## 1.4 தலைவரின் மீளாய்வு

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்காக 2023 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான அறிக்கையை நான் இவ்வாறு சமர்ப்பிக்கிறேன்.

**கம்பனியின் செயலாற்றல்**

2021 இன் தொற்றுநோய்க்குப் பின்னர் 2022 ஆம் ஆண்டில், உண்மையான பொருளாதாரம் பரந்த அடிப்படையிலான சரிவை ஏற்படுத்தியது, 2019 ஆம் ஆண்டிலிருந்து குறைவான செயல்திறன் கொண்ட விவசாயத் துறை, முன்னைய ஆண்டை விட 2022 இல் 4.6% வீழ்ச்சியடைந்துள்ளது. இது பெரும்பாலும் இரசாயன உரங்கள் மற்றும் பிற விவசாய இரசாயனங்களின் கடுமையான பற்றாக்குறை, அதிக மூலப்பொருள் செலவுகள் மற்றும் விநியோக வலயமைப்பு குறுக்கீடுகள் காரணமாக இருந்தது. அரிசி, தேயிலை, காய்கறிகள், விலங்கு உற்பத்தி, மற்றும் கடல் மீன்பிடித்தல் மற்றும் நீரியல் வளர்ப்பு ஆகியவை விவசாயத் துறையில் மொத்த வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்ததுடன் அதே சமயம் ஓலை பழங்கள், காடுகள் மற்றும் மரம் வெட்டுதல் ஆகியவை ஆண்டு முழுவதும் அதிகரித்தன.

இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் இரசாயன உர இறக்குமதிக்கான திடீர் தடையானது நாட்டின் பிரதான உணவு உற்பத்தியில் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தியது, இது 2022 இல் உணவு நெருக்கடிக்கு வழிவகுத்தது, இது அந்நிய செலாவணி திரவத்தன்மை பற்றாக்குறைக்கு மத்தியில் வரையறுக்கப்பட்ட உணவு இறக்குமதியால் மோசமடைந்தது. இரசாயன உரங்கள் விநியோகம் தடை செய்யப்பட்டதால், இது எங்கள் நிறுவனத்தின் வியாபாரத்தை நேரடியாக பாதித்துள்ளதுடன், வருமானமும் அதிகளவில் குறைந்துள்ளது.
கம்பனியின் செயற்பாடுகள் இரசாயன உரங்களை விநியோகிப்பதில் இருந்து உள்ளூர் வழங்குனர்களால் சுற்றுச்சூழல் நட்பு உர விநியோகத்தின் செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கும் எளிதாக்குவதற்கும் மாற்றப்பட்டது. இருப்பினும், உலக வங்கி மற்றும் பிற நன்கொடையாளர் திட்ட நிதியுதவியுடன் உரங்களை இலவசமாக விநியோகிப்பதில் இந்நிறுவனம் பெரும் பங்காற்றியுள்ளது.
2023 மார்ச் 31, இல் முடிவடைந்த நிதியாண்டில், நிறுவனம் ரூபா. 361 மில்லியன் தேறிய இலாபத்தைப் பதிவு செய்துள்ளதுடன் இதில் பிரதானமாக கம்பனியின் வட்டி வருமானத்தைக் கொண்டுள்ளது. 84,588.762 மெற்றிக் தொன் நீட் உரம் விவசாய சமூகங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

**சமூகப் பொறுப்புகள்**

தேசிய விவசாயத்தை வலுப்படுத்துதல், விவசாயிகள் சமூகத்திற்கு சிறந்த வாழ்க்கை நிலையை வழங்குதல் மற்றும் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவுதல் ஆகியவை இந்த சிக்கலான நேரத்தில் வழக்கம் போல் மேற்கொள்ளப்பட்டன.

அரசின் கொள்கைகளை செயற்படுத்தும் ஒரு முன்னனி நிறுவனமாக, அரசாங்கம் மற்றும் பொதுமக்களுக்கு எங்களின் உயர்ந்த பங்களிப்பை வழங்குவதன் மூலம், விவசாயிகளுக்கு உரங்களை எந்தவித தாமதமும், பற்றாக்குறையும் இன்றி விநியோகிக்க முடிந்தது. மேலும் நமது நாட்டில் விவசாயத் துறையின் அபிவிருத்தியில் முக்கியப் பங்காற்றியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நேர்கொண்ட பார்வை**

ஒரு நிலையான நிதி நிலை, ஒரு நூற்றாண்டு காலமாக தொழில்துறையின் கருத்து, ஆற்றல் மிக்க மற்றும் புதுமையான மனித மூலதனம் மற்றும் ஒரு முழுமையான அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக இருப்பதற்கான கட்டுப்பாட்டாளர்களின் வலுவான ஆதரவு ஆகியவை எங்கள் வளர்ச்சிக்கு ஒரு நல்ல அடித்தளத்தை வழங்குகின்றன.

உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலையால் ஏற்படும் சவால்களை சமாளிக்கவும், பொருளாதாரத்தில் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தவும் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பின் தேவை எழுந்துள்ளது. மேற்கூறியவற்றை நிவர்த்தி செய்வதற்கும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவை உறுதி செய்வதற்கும் அரசாங்கம் உரிய நேரத்தில் பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பாரம்பரிய விவசாய முறைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது அரசாங்கத்தின் முக்கிய நடவடிக்கையாகும். அளவிலான பொருளாதாரங்களை அதிகரிப்பது, நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான விவசாயத்தை ஊக்குவித்தல், வளங்களை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கான ஸ்மார்ட் விவசாயத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகியவை விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய முக்கிய அம்சங்களாகும்.

மேலும், மண் அபிவிருத்தி மற்றும் பயிர்செய்கை நோய் கண்டறிதலுக்கு நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், ஹைட்ரோபோனிக்ஸ் முறைகளை ஊக்குவித்தல், கலப்பின மற்றும் அதிக மகசூல் தரும் பயிர்களைத் தேர்ந்தெடுப்பது, பொதியிடல் சேமிப்பு மற்றும் விநியோகத்திற்கான மேம்படுத்தப்பட்ட அறுவடைக்குப் பின்னைய சிகிச்சை நுட்பங்கள் போன்ற அம்சங்கள் அரசாங்கத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரலில், சிறிய குடும்ப விவசாயம் மற்றும் நகர்ப்புற விவசாயம் என்ற கருத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி ஊக்குவித்தவும் உள்நாட்டு விவசாயத்தை ஊக்குவிக்கும் தொற்றுநோய்களின் போது மக்களின் அடிப்படை உணவுத் தேவைகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தது. பல தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் உணவு உற்பத்தியை அதிகரிப்ப உர மானியத் திட்டத்தைத் தொடர்ந்தது மற்றும் நெல் சாகுபடிக்கு உரங்களை இலவசமாக வழங்கியது. அதன்படி, நாட்டின் விவசாயத் தொழிலுக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கும் என்பது உறுதி. இந்த புதிய வாய்ப்புகளை ஒருங்கிணைக்கும் வகையில் எங்களது தந்திரோபாயங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன, மேலும் எங்கள் வெற்றி குறித்து நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

**நன்றி**

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பில் எமது நிறுவனத்தின் ஊழியர்களுக்கு இவ்வேளை நான் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அவர்களது முயற்சி, முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் செயற்றிறன் ஆகியன எமது நிறுவனத்தை மேலோங்கச் செய்ய உதவியது.

நிறுவனத்தின் நோக்கங்களை அடைகையில் பணிப்பாளர் சபை பெற்றுக்கொண்ட ஒத்துழைப்பும் பங்களிப்பும் மெச்சத்தக்கதுடன் தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் உட்பட ஊழியர்கள் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்புக்கும் வழிகாட்டலுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

அதேபோன்று கௌரவ விவசாய அமைச்சர், அமைச்சின் செயலாளர், அமைச்சின் ஊழியர்கள், கமநல சேவை ஆணையாளர் நாயகம், கமநல சேவை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எமது நிறுவனத்திற்குப் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்பிற்காக அதிகம் நன்றி தெரிவிக்கின்றேன்.

மேலும் எமது இறக்குமதி விலைப் பட்டியல்களை உரிய காலத்தில் செலுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திறைசேரி பணிப்பாளர் நாயகம் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இறுதியாக எமக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வங்கி ஊழியர்கள் மற்றும் எமது நிறுவனத்தின் அனைத்து தரப்பினருக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கலாநிதி திரு. ஜகத் பெரேரா**

**தலைவர்**

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி**

## 1.5 கம்பனியின் நிறுவகக் கட்டமைப்பு



## 1.6 பணிப்பாளர் சபை

**•வுகை பணிப்பாளரின் பெயர்**

•தலைவர் - கலாநிதி திரு. ஜகத் பெரேரா
•பணிப்பாளர்- கே.ஏ.டபிள்யூ.திருமதி பெர்னாண்டோ
•பணிப்பாளர் - திரு.களு துரகே சுனந்த லால்
•பணிப்பாளர் - திரு. எச்.ஏ. குமார
•பணிப்பாளர் - திரு. டி. சுசில் சிறிநந்தன டி சில்வா
•பணிப்பாளர் - திரு.எஸ்.எல். பரணமான்ன
•கம்பனி செயலாளர் - திருமதி ஏ.எம். ஷமிலா எஸ். திலகரத்ன (சட்டத்தரணி)

**•கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

•தலைவர் - திரு. கே.ஏ.டப்ளியு. பெர்னாந்து
•அங்கத்தவர் - வைத்தியர் எச்.ஏ குமார
•அங்கத்தவர் செல்வி. எச்.ஐ. நில்மினி
•அங்கத்தவர் திரு. கே. சுனந்தலால்
•அங்கத்தவர் பீ.கே.யூ. அபேரத்ன
•அவதானிப்பாளர் திரு. ஆர்.எம்.பீ.ஏ ஜானக
•அழைப்பாளர் திரு. எச்.வீ.ஏ.ஜே. விஜேசிரி (உள்ளக கணக்காய்வாளர்)

**சிரேஷ்ட முகாமைத்துவக் குழு**

•பொது முகாமையாளர் - பேராசிரியர் திரு. டப்ளியு.எம்.ஜயந்த வீரரத்ன
•நிதி, நிர்வாக முகாமையாளர் - திரு. எஸ்.என்.ஜே. விக்ரமசிங்ஹ
•தயாரிப்பு மற்றும் விநியோக முகாமையாளர் திரு. ஜே. சீ. விக்ரமசிங்ஹ
•உள்ளகக் கணக்காய்வாளர் - எச். வீ. ஏ. ஜே விஜேசிறி

## 1.7 நிறுவன நல்லாளுகை

அரச தரப்பிற்குச் சொந்தமான எமது நிறுவனத்தில் அனைத்து செயற்பாடுகளினதும் அடிப்படை எம்மிடம் பொதிந்துள்ள நிறுவனத்தின் நல்லாளுயாகும். நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்ற சகல சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் கூடிய கட்டுப்பாட்டு ஒழுங்கு, நிறுவனத்தின் நல்லாட்சியாகும் என சுருக்கமாகக் கூறலாம். எமது நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து சட்டதிட்டங்களுக்கும் அமைவாக நிறுவனத்தின் அனைத்து தரப்பினரினதும் கருத்துக்களை சமப்படுத்தும் செயற்பாட்டில் எமது நிறுவன நல்லாட்சி அதன் பிரதான தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது. எமது நிறுவனத்தினால் அரசு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இதனால் சிறந்த நிறுவன நல்லாளுகையை நடைமுறைப்படுத்துவது எமது பிரதான பொறுப்பாக உள்ளதுடன் அதற்காக அதிக முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது எமது நிறுவனத்திற்கான பிரதான சவாலாகும். இதனால் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நடைமுறையிலுள்ள ஒழுக்க விதிமுறைகளுக்கு முற்றிலும் உட்பட்டுள்ளதாகவும் அவை நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதாகவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை எப்பொழுதும் உறுதி அளிக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் கூட்டமைப்பு ஆளுகையின் பணிக் கட்டமைப்பு**

| ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு | உறுதிப்பாடு | உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு |
|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அகிகாரச்சட்டம் | பொதுத் திறைசேரி | பங்காளர்கள் |
| 1971 இன் 31 ஆம் இலக்க நிதி அகிகாரச்சட்டம் | உரிய அமைச்சு | பணிப்பாளர் சபை |
| 1995 இன் 15 ஆம் இலக்க கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு |
| பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல் | பொது முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு |
| | | உள்ளகக் கட்டுப்பாடு |
| | | உள்ளகக் கணக்காய்வு |

## 1.8 நிறுவனத்தின் நல்லாளுகை நோக்கி கம்பனியின் பங்களிப்பு

**சபை கூட்டங்கள்**

• கடந்த ஆண்டில் அறிக்கை ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**பதவியணியனர் தேவைப்பாடு**

❿ பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய சகல பதவியணித் தேவைப்பாடுகளும் பதவி உயர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**கொள்கை தீர்மானங்கள்**

• சகல கொள்கைத் தீர்மானங்களும் தயாரிக்கப்பட்டு பாரிய உபாயமார்க்கங்கள் சபை அறையில் கலந்துரையாடப்படுகின்றன.

**முக்கியமான விடயங்கள்**

❿ மிகவும் நெருங்கிய ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய சகல முக்கிய விடயங்களும் முகாமைத்துவக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்படுகின்றன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

❿ மீளாய்வாண்டின் போது 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**விரிவான திட்டங்களும் தொழில் திட்டங்களும்**

❿ நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்காக நிறுவகத்தின் திட்டம் உயர்மட்ட முகாமைத்துவத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

## 2. இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவம் எனப்படுவது இடரை எதிர்வுகூறுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் அவ்வாறான தாக்கங்களை குறைப்பதற்கு வெவ்வேறு நடைமுறைகளை இனங்காணும் செயற்பாடாகும். அனைத்து இடர்களையும் தவிர்த்தலின் பெறுபேறு எவ்வித முன்னேற்றமொன்று அல்லது எவ்வித வெற்றியாக இருக்க முடியாது அதனால் கம்பனியின் இடர் முகாமை தந்திரோபாயம் பணிப்பாளர் சபையின் அவ்வப்போதைய மேற்பார்வைக்கு உட்படுவதுடன் இடர்களைக் குறைப்பதற்கு போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறமையொன்று முறையாக தயாரித்தல் கம்பனியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. விதிக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை முறையாக பின்பற்றுகின்றதா என உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சாதாரண மற்றும் விசேட புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் இருந்தால் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும்.



எமது கம்பனியால் முகங் கொடுக்கும் பிரதான இடர் இவ்வாறு சுருக்கமாக காண்பிக்கலாம்

**நிகழ்தகவு**

| | | | | |
|---|---|---|---|---|
| *உயர்ந்த* | | | **2 ,9** | **5,8** |
| *மத்திய* | | | **3,15** | **1 ,4 ,6 ,10 ,14** |
| *சிறிய* | **7** | | | |
| *மிகவும் சிறிய* | | **11** | **13** | **12** |
| | *சிறிய* | *நடுத்தர* | *உயர்* | *மிகவும் கூடிய* |

**தடவைகள்**

| *அணி இல* | *அபாயம்* | அபாயத்திற்கான பரிகாரம |
|---|---|---|
| **01** | உலக சந்தையில் உரத்தின் விலை அதிகரித்தல் | விலைத் தளம்பல்களை தொடர்ச்சியாக அவதானித்து சாதகமான விலை காணப்படும் சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்தல் |
| **02** | அரச கணக்காய்விற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதால் போட்டியாளர்களுடன் போட்டியிடும் போது பாவிக்கும் உத்திகளின் கட்டுப்பாடு | அரச கணக்காய்வு விதிகளுக்குள் அடங்காத உத்திகளை உச்ச அளவில் பயன்படுத்தலும் ஏற்றுக்கொள்ளலும் மற்றும் பொதுத் திரைசேரியினால் அனுமதிக்கப்படுவதற்கான நிறுவனம் குறித்த வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்தல் |
| **03** | இரசாயன உரப் பாவனையினால் ஏற்படும் மோசமான சுகாதாரப் பாதிப்புகள் காரணமாக வாடிக்கையாளர்களது கேள்வி குறையும் அபாயம் | சேதனப் பசளை சந்தையினைத் திறந்துவிடல். ஓவ்வொரு மண் வகையிலும் குறைபாடாகவுள்ள பசளைக் கூறுகளை மாத்திரம் சேர்த்து வெவ்வேறான கலவைகளை தயாரித்தல். |
| **04** | அரசாங்கத்தினால் வர்த்தகம் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களில் திடீர் மாற்றங்களையும் புதிய சட்டங்களையும் அமுல்படுத்தல் | அரசாங்கத்தின் கொள்கைகளை அங்கீகரித்தலும் தொடர்ச்சியாக அவதானித்தலும் மற்றும் அதற்கமைவாக நிறுவனத்தின் உத்திகளை அமைத்துக்கொள்ளல் |
| **05** | உற்பத்திகளின் விலை அரசினால் கட்டுப்படுத்தப்படல் | |
| **06** | அரசாங்கத்தினால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு கொள்வனவ் செய்யப்படாத குறைந்த சந்தை கேள்வியுடைய உர வகைகளை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் | |
| **07** | விலைமனுக் கோரல் / பெறுவனவு செயன்முறைகளுக்காக மேலதிக காலம் செலவிடல் | |
| **08** | குறித்த காலத்தில் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான முறையான ஒரு பொறிமுறை காணப்படாமையினால் மனித மற்றும் செற்பாட்டு வழுக்கள் ஏற்படல் | இந்த அபாயத்தினைத் தடுப்பதற்கு தரமான ஒரு கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையினை அறிமுகம் செய்தல் |
| **09** | தற்போதைய தரச் செயன்முறையில் வினைத்திறன் மற்றும் தரமான தொழிற்படு ஒழுங்குமுறைகள் காணப்படாமை | இந்த அபாயத்தினைத் தடுப்பதற்கு தரமான தொழிற்படு ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தல் |

| *அணி இல* | *அபாயம்* | அபாயத்திற்கான பரிகாரம |
|---|---|---|
| **10** | மோசமான காலநிலை காரணமாக வாடிக்கையாளர்களது கேள்வி குறையும் அபாயம் | எதிர்பாராத காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தாங்கிக் கொள்ளும் வகையிலான நெகிழ்வினை உரவாக்கக்கூடிய முதலீடுகளை அங்கீகரித்தலும் பராமரித்தலும் |
| **11** | இலாபமடையும் நோக்கிலான திட்டமிடப்பட்ட ஏமாற்றுதல்கள், யுக்திகள் மற்றும் மோசடிகள் | மோசடிக்காரர்களின் ஊடுருவலைக் குறைக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை பராமரித்தலும் ஒழுக்கவிழுமியமுள்ள கலாச்சாரத்தினை வளப்படுத்தலும் |
| **12** | நிறுவனத்தின் நிதித் தேவையினை சமாளிப்பதற்கான போதிய நிதி காணப்படாத அபாயம் | வருமானம் மற்றும் செலவினங்களை தொடர்ச்சியாக அவதானித்து தொடர்பு படுத்தலும் வங்கிகள் மற்றும் திரைசேரியுடனான உறுதியான உறவினை பேணுதலும் |
| **13** | கடன்பட்டோர் குறித்த காலப்பகுதியில் கடன்களை மீளச் செலுத்தாமையினால் ஏற்படும் இழப்புகள் | நீண்டகால கடன்களுக்காக சட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கிய உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை பேணுதல் |
| **14** | வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுப் பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படும் அபாயம் | முக்கியமான உர வகைகளின் இறக்குமதி செலவினை அரசு ஏற்கின்றது. எனினும் ஒரு சிறு தொகை உரம் நிறுவனத்தின் செலவில் இறக்குமதி செய்யப்பட்டது. அப்படியான சந்தர்ப்பங்களில் அபாயத்தினைக் குறைக்கும் வகையில் வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றன |
| **15** | வட்டி வீதத்தின் மாற்றங்களுக்கேற்ப நிறுவனத்தின் நிதி நிலைமைகளின் சாதகமான வெளிப்பாடு | இறக்குமதிப் பட்டியல்கள் அரசினால் செலுத்தப்படுவதனால் வட்டி வீதத்தினால் பாதிக்கப்படும் பிரதான பிரிவு முதலீடுகளாகும். இதனால் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக வட்டி வீதங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தலும் வங்கிகளுடன் முதலீடுகளுக்காக கவர்ச்சியான வட்டி வீதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் அவசியமாகும். |

## 3. செயலாற்றல் குறிகாட்டிகள




***வருமானம்***

இரசாயன உரப் பாவனையில் அரச கொள்கையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றம் காரணமாக, நிறுவனத்தின் இரசாயன உரங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் பிரதான வியாபாரம் நிறுத்தப்பட்டது. 2022/23 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் விற்பனை வெகுவாகக் குறைந்துள்ளது.




*அட்டவணை இல. 01 கம்பனியின் வருமானம் (ரூ.மி)*

**மொத்த இலாபம்**

கம்பனியின் இரசாயன உர செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதால், நிறுவனத்தின் விற்பனை செலவு குறைவாக இருந்தது. இதனால் அந்த ஆண்டில் நிறுவனம் ரூபா 178 மில்லியன் மொத்த இலாபத்தைப் பெற முடிந்தது.




அட்டவணை இல. 02 கம்பனியின் மொத்த இலாபம் (ரூ.மி)

**நிர்வாக செலவினம்**

முக்கியமாக பொருட்கள் மற்றும் சேவைகளில் ஏற்பட்ட பணவீக்கம் மற்றும் விலை உயர்வுகள் காரணமாக. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிறுவனத்தின் நிர்வாகச் செலவு 12% அதிகரித்துள்ளது,




அட்டவணை இல. 03 கம்பனியின் நிர்வாக செலவினம் (ரூ.மி)

### விநியோக செலவினம்

மீளாய்வாண்டில் கம்பனியின் விநியோகச் செலவுகள் கணிசமாகக் குறைந்துள்ளன. கம்பனி சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்ளூர் உர விநியோக நடவடிக்கைகளுக்குத் அர்ப்பணிப்புடன் இருக்கும் அதே வேளையில் விநியோகச் செலவுகள் அந்தந்த வழங்குனர்களால் ஏற்கப்படுவதே இதற்குக் காரணம். இதனால் விநியோக செலவு 61% குறைந்துள்ளது.




அட்டவணை இல. 04 கம்பனியின் விநியோக செலவினம் (ரூ.மி)

### நிதி வருமானம் மற்றும் செலவினம்

ஆண்டில் நிதி வருமானம் ரூபா 124 மில்லியனாகும். நிலையான வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட காலரீதியான முதலீட்டினூடாக இந்த மூலதன வருமானம் உழைக்கப்பட்டது.




˙டவணை இல. 05 கம்பனியின் நிதிச் செலவினம் (ரூ.மி)

### வரிக்கு முன்னரான இலாபம்

நிறுவனம் கடந்த காலம் முழுவதும் நிலையான லாபத்தை பராமரிக்க முடிந்தது. வட்டி வருமானத்தில் தொடர்ச்சியான அதிகரிப்பு நிறுவனத்தின் நிகர லாபத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தது. 2022.˙.23 இல் வட்டி வருமானம் 220மு அதிகரித்துள்ளதுள்ளது இதன் விளைவாக வரி விதிப்புக்கு முந்தைய இலாபம் 125மு அதிகரித்துள்ளது.




அட்டவணை இல. 06 கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.மி)

**நிதி மீளாய்வு**

| | | 2023 | 2022 | வேறுபாடு % |
|---|---|---|---|---|
| ***உழைப்பு பொழிப்பும் வீதங்களும்*** | | | | |
| **வருமானம்** | ரூ.மி. | 207 | 770 | -73 |
| *தொழிற்பாட்டு நடவடிக்கையினால் கிடைத்த இலாபம்* | ரூ.மி. | 131 | 128 | 2 |
| *வட்டிக்கு முன்னரான இலாபம்* | ரூ.மி. | 501 | 234 | 114 |
| *வட்டிக்கு பின்னரான இலாபம்* | ரூ.மி. | 361 | 160 | 125 |
| | | | | |
| *மொத்த இலாப எல்லை* | % | 63 | 16 | 280 |
| *தொழிற்பாட்டு இலாப விகிதம்* | % | 20 | 16 | 25 |
| ***நிதி நிலைமைப் பொழிப்பு விகிதங்களும்*** | | | | |
| | | | | |
| மொத்த சொத்துக்கள் | ரூ.மி. | 21,125 | 22,293 | |
| *மொத்தக் கடன்* | ரூ.மி. | 17,019 | 19,217 | |
| *பங்குதாரர்களுக்கு உரித்து* | ரூ.மி. | 3.432 | 3,075 | |
| *நடைமுறை விகிதம்* | தடவை எண | 2 | 4.5 | |
| *விரைவு விகிதம்* | தடவை எண் | 2 | 1.5 | |
| *தொழிற்படு மூலதனத்திற்கான விற்பனை* | தடவை எண் | 41 | 22 | |
| | | | | |

## 4. பௌதீக இலக்கு மற்றும் நிதி முன்னேற்றம 2023

| துணை எண் | செயற்திட்டம் / செயற்பாடுகள் | 2023 ஆம் ஆண்டின் இலக்கு | | முன்னேற்றம | | திட்டம்/செயல்பாட்டின் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு கோள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம | நிதி முன்னேற்றம் (ரூபா) | |
| 1 | உலக வங்கி உதவியின் கீழ் யூரியா உரத்தை இறக்குமதி செய்து விநியோகித்தல். | திரு. டன் | 55,101 | 55,101 | 704 | விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பயிர்களுக்குத் தேவைப்படும் போது தட்டுப்பாடு இல்லாமல் உரிய நேரத்தில் மானிய விலையில் உரங்களை சரியான அளவில் விநியோகித்து விவசாய தன்னிறைவு பெறவும். |
| 2 | USAID நிதியுதவியுடன் உர இறக்குமதி மற்றும் விநியோகம். | திரு. டன் | 7,707 | 7,707 | 84 | |
| 3 | ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஆதரவின் கீழ் MOP உரத்தை இறக்குமதி செய்து விநியோகித்தல். | திரு. டன் | 16,729 | 16,729 | 271 | |
| 4 | USAID நிதியுதவியுடன் TSP உரங்களின் இறக்குமதி மற்றும் விநியோகம். | திரு. டன் | 15,265 | 15,265 | 159 | |
| 5 | ஜப்பானிய ஆதரவின் கீழ் யூரியா உரம் இறக்குமதி மற்றும் விநியோகம். | திரு. டன் | 5,769 | 5,769 | 53 | |

## 5. தரப்பினர்களுக்காக கம்பனியின் பங்களிப்பு

- கம்பனியின் வழமையான செயற்பாடுகள் ஊடாக நிறுவனத்தின் அனைத்து தரப்பினருக்காக றெுமதியைக் கூட்டும் செயற்பாடு

**உள்ளீடு**

நிதிச் சந்தை
*உரிமை ரூ. 3,432 மில்*
*கடன் ரூ. 17,019 மில்*

மூலதனம் ஆதனங்கள்
பொறிகள் மற்றும்
உபகரணங்கள் ரூ.*525 மில்*

மனித மூலதனம்
*129 தொழிலாளர்கள்*

சமூக மற்றும் தொடர்பாடல்
மூலதனம் - *க.சே.நி 557*
*பதிவுசெய்யப்பட்ட பிரதிநிதி - 150*
*பதிவுசெய்யப்பட்ட வழங்குனர் -17*

**பெறுமதி கூட்டும் செய்முறை**

வழங்கல் சங்கிலி முகாமை

நிதி முகாமை

வாடிக்கையாளர் தொடர்பு

**இறக்குமதி**

↓

**கலவை மற்றும் களஞ்சியம்**

↓

**விநியோகம்**

நல்லாளுகை

செயற்திறன் செயற்பாடு

நல்ல தொழில் உறவு

**உருவாக்கப்பட்ட பெறுமதி**

நிதி அளிப்போருக்கு
*ரூ. 27.5 மில்*

*ஊழியர்களுக்கு*
*ஊழியர் கிரயம் ரூ. 67 மில்.*
*உபகாரம் ஊக்குவிப்பு 12 மில்*

நுகர்வோருக்கு
விற்பனை *220 மில்*

வழங்குனருக்கு
*கொள்வனவு ரூ. 354 மில்*

*அரசிற்கு*
*வரி ரூபா 139.*

நிறுத்தி வைத்தல் *ரூ. 356 மில்*

## 6. உர விநியோக செயற்பாடு சுருக்கமாக

### கம்பனியின் சந்தைப் பங்கு

அரசின் கொள்கை மாற்றத்தால் இரசாயன உரங்களை விநியோகிக்கும் கம்பனியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. மேற்படி கொள்கையின் விளைவாக முழுமையான இரசாயன உரச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், உலக வங்கி நன்கொடையாளர் திட்டங்கள் மூலம் பெறப்பட்ட இரசாயன உரங்களின் விநியோகஸ்தராக கம்பனி செயல்பட்டது.

### ஆண்டின் போதான வயல் மற்றும் ஏனைய உர விநியோகம்




*அட்டவணை 07 ஆண்டின் போதான வயல் மற்றும் ஏனைய உர விநியோகம்*

**பிராந்தியக் களஞ்சியங்களின் விநியோக வலையமைப்பு**



## 7. கம்பனியின் ஊழியர்கள் தொடர்பான மீளாய்வு

கம்பனியின மிகவும் முக்கியமான முன்னுரிமையாளர் அதன் ஊழியர்களாகும். இதுவரை எமது கம்பனியில் ஊழியர்கள் எண்ணிக்கை 136 ஆகும். கம்பனியின் பலம் அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்பிலேயே தங்கியிருக்கின்றது. அதனுடன் இணைந்ததாக கம்பனியும் தனது ஊழியர்களின் நிலைத் திருதன்மை தொடர்பாக எப்போதும் கவனத்தை செலுத்தி வருகின்றது. அவ்வாறே அவ்வப்போது ஊழியர் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் சகல தொழிலாளர் சட்டங்களையும் எமது கம்பனி பின்பற்றி வருகின்றது.

- **ஆண்டின் போதான மனித வளங்கள் மதிப்பீடு**



- **நிறுவனத்தின் பதவியணியினர் வலிமை**




*அட்டவணை ஐந்தாண்டுகளில் பதவியணிக்கான இழப்பீடுகள்*

- **மனித மூலதனத்தின் மீதான நிதி மீளாய்வு**

| ஆண்டு | 2022/23 | 2021/22 |
|---|---|---|
| ஒரு ஊழியர் வருமானம் (000’) | 1.77 | 5.9 |
| ஒரு ஊழியருக்கான இலாபம் (000’) | 3 | 1.2 |
| ஒரு ஊழியர் கிரயம் (000’) | 0.6 | 0.5 |
| தொழிலாளர் எண்ணிக்கை | 117 | 129 |

# 8. நிதி அறிக்கையிடல்

## 8.1 பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழான தேவைப்பாட்டிற்கு அமைவாக நிதியாண்டிற்கான கம்பனியின் விரிவான வருமானக் கூற்றையும் நிதியாண்டின் இறுதியில் உல்லவாறான கம்பனியின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான நிதிக்கூற்றுக்களையும் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

148 ஆம் பிரிவின் கீழ், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளமையை நியாயமான துல்லியத்தன்மையுடனும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உடனுக்குடனும் முறையாகவும் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களது பொறுப்பாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒருமைப்பாட்டிற்கும் குறிக்கோளுக்குமான பொறுப்பை சபை ஏற்றுக்கொள்கின்றது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு நியாயமானதும் வெளிப்படையுமான தீர்ப்புகள் எடுக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்களின் வடிவமும் கருப்பொருளும் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும் கன்பனி அதிகாரச்சட்டத்தால் தேவையான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்குகின்றன. பணிப்பாளர்கள், கம்பனி பற்றிய தமது அறிவு, முக்கிய செயற்பாடுகள் மற்றும் குறித்த விசாரணைகளின் மூலம் அடுத்துவரும் ஆண்டில் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய மூலவளங்கள் உள்ளன என்பது குறித்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். இந் நிதிக்கூற்றுக்கள் அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள், கன்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டறிந்து தடுக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படி செயற்படுத்தியுள்ளனர். கன்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் படி தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்கிலாபத்தைப் பகிர்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அப் பகிர்வை அடுத்து கடன் தீர்வுத்திறன் ஆய்வில் திருப்திநிலையில் கம்பனி நிலவும் என்பது குறித்து கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் படி, கிடைக்கப்பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளர்களிடமிருந்து தற்போது பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாபம் தொடர்பான கடன் தீர்வுத்திறன் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்களின் மதிப்பாய்வு மற்றம் அது தொடர்பான அபிப்பிராயமொன்றை வெளியிடுவதற்காக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**இணக்கப்பாட்டு அறிக்கை**

நிதி நிலைமை திகதியில் உள்ளவாறு கம்பனி தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கான சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் தமது சிறந்த அறிவிற்கமைய செலுத்தப்பட்டும் தேவையான சந்த்ர்ப்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டும் உள்ளவதாக் பணிப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்,



திருமதி ஏ.எம். ஷமிலா எஸ். திலகரத்ன்
சபையின் கட்டளைக்கமைய
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்
செயலாளர்கள்

## 8.2 தலைவரினதும் நிதி முகாமையாளரினதும் பொறுப்புக் கூற்று

2023 மார்ச் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிதிக்கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்.
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம்.
- பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட நல்லாளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை.

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய முறையிலும் தொடர்ச்சியாகவும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் விளக்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நாம் உறிதிப்படுத்துகின்றோம். குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள எதுவித மாற்றங்களும் இன்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. உயர் தீர்ப்பிலும் சிக்கல்வாய்ந்த விடயங்களுடன் தொடர்புபட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் கணக்காய்வுக் குழுவுடன் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும், கணக்கீட்டுப் பதிவேடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்கும் போது போதியளவு முறையான கவனத்தை எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர்களால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் கணக்காய்வுகளின் மூலம் கம்பனியால் உருவாக்கப்பட்ட கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுள்ளமைக்காக நியாயமான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் கணக்கீட்டிலும் ஏதேனும் முறைமையால் வழங்கப்படும் உறுதிப்பாட்டை அளவிடுகையில் உள்ளார்ந்த வரையறைகள் காணப்படுகின்றன.

கம்பனியின் கணக்காய்வுக் குழுவானது, கணக்காய்வுகளின் ஆக்கத்திறனை மீளாய்வு செய்து, கணக்காய்வு, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடல் பற்றிய பிரச்சினைகள் உள்ளகக் கணக்காய்வாளர்களுடனும் சுதந்திரமான கணக்காய்வாளர்களுடனும் காலத்திற்குக் காலம் சந்திப்பை நடாத்தி கலந்தாலோசித்து வருகின்றது. சுதந்திரமான கணக்காய்வாளர்களும் உள்ளகக் கணக்காய்வாளர்களும் கணக்காய்வுக் குழுவினருடன் ஏதேனும் விடயம் குறித்து கலந்தாலோசனைகளை நடாத்துவதற்கு முழுமையான விருப்பிற்குரிய வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டன.

…………………………………….
கலாநிதி திரு. ஜகத் பெரேரா
தலைவர்

…………………………………….
எஸ். என். ஜே. விக்ரமசிங்ஹ
நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்.

## 8.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஏஆர்ஜ/ஏ/சீசீஎப்/2022/10 2023 திசெம்பர் 08

தலைவர்
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

### 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் 'கம்பனி' 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியினால் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் நியாயமான உண்மையான நிலையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வாண்டிற்குரிய விற்பனை கிரயத்தை கணக்கீடு செய்யும் போது விற்பனை கிரயமாக கருத்தில் கொள்ள முடியாத பிரதேச உரக் களஞ்சியம் மற்றும் சமநல சேவைகள் நிலையங்களிற்கு உரப்பகிர்வுக்காக செலவிடப்பட்ட போக்குவரத்துக் கட்டணமான ரூபா 453,863,594 தொகை உர விற்பனை மற்றும் விநியோகம் செயற்பாட்டுக்குரிய பிரதான அலுவலகத்தின் ஏற்றல் கட்டணங்கள் ரூபா 9,646,304 தொகை, பிரதேச களஞ்சியத்தில் செலவிடப்பட்ட ஏற்றல் மற்றும் இறக்கல் கட்டணங்கள் ரூபா 339,744 பிராந்திய களஞ்சியங்களில் சில்லறை செலவினங்கள் ரூபா 29,850 தொகை, ஊழியர் சம்பளம், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு, மேலதிக படிகள், 1/20 படிகள், ஊக்குவிப்பு படிகள், உபகாரப் படிகள் மற்றம் இணைந்த படிகளாக செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 7,122,689 உள்ளடக்கப்பட்டமை காரணமாக செயற்பாட்டு இலாபம் ரூபா 471,002,81 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் உர இருப்பின் பெறுமதி ரூபா 29,771,585 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது இறுதி இருப்பின் பெறுமதியாக இருப்புக் கணக்கின் பெறுமதியான ரூபா 30,472,835 குறிப்பிடப்பட்டிருந்தது

(இ) 39 பொருள் பெறுவனவு பத்திரங்களுக்குரிய ரூபா 19,371,441 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் 2000 இலக்க இருப்பு கணக்கில் கணக்கு வைத்ததன் பின்னர் J/MAY/0028 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் கொடுத்தோர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது எனினும் இப்பொருட்களை அகற்றுவதற்குரிய காரணங்களை நாட்குறிப்பு பதிவுகள் உடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியாண்டில் இந்திய கடன் வசதிகள் மற்றும் உதவிகளின் கீழ் கிடைத்திறருந்த டி.எஸ்.பி யூரியா மற்றும் எம்.ஓ.பி ஆகிய உரங்கள் 111,077 மெற்றிக் தொன் துறைமுகத்திலிருந்து தலைமை

அலுவலகத்திற்கு களஞ்சியத்திற்கும் பிரதேச களஞ்சியங்களுக்கும் எடுத்துச் செல்வதாக குறிப்பிடப்பட்டு விடுவிப்பு, போக்குவரத்து இறக்கி ஏற்றல் கூலி மற்றும் நிர்வாக செலவினமாக செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டு மொத்தம் ரூபா 1,346,652,978 தொகை திறைசேரியிடமிருந்து மீளப்பெற கூடிய செலவினமாக கொள்வனவு கிரயத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது அவ்வாறு கழிக்கப்பட்ட பெறுமதி கம்பெனியின் பொதுவான தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உரக் கொள்வனவிற்காக செலவிடப்பட்ட செலவினம் மற்றும் கடன் மற்றும் உதவிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உரத்துக்காக செலவிடப்பட்ட செலவினங்களில் மொத்தத்தை விஞ்சி இருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் கொள்வனவு கிரயம் ரூபா 505,074,049 ஆன செலவினம் ஒன்றாக மாரிஇருந்தது இந்த அசாதாரண விடயம் ஒன்று அவதானிக்கப்பட்டதுவுடன் கொள்வனவு கிரய செலவு மீதி ஒன்றாக மாறியிருந்த விதம் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தெளிவு படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு கம்பெனி தவறி இருந்தது.

(உ) 2021 ஒக்டோபர் 18 ஆம் திகதி 100,224 நனோநைட்ரஜன் போத்தல்கள் இறக்குமதி செய்யப்பட்டு வழங்குனருக்கு போத்தல் ஒன்றுக்கு 12.45 அமெரிக்கா டொலர் வீதம் ரூபா 253,301,126 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பின்னர் போத்தல் ஒன்றின் விலை 10 அமெரிக்க டொலர் வரை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கூடுதலாக ருந்தது. செலுத்தப்பட்டிருந்த ரூபா 49,846,406 தொகையை ஈடுசெய்வதற்கு வழங்குனர் இணங்கியிருந்த போதும் கணக்காய்வு திகதி வரையிலும் அத்தொகையை ஈடுசெய்வதற்கு வெளியிப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாத ரூபா 3,672,270 பெறுமதியான 500 மில்லி லீட்டர் அளவிலான் 1809 நனோ நைட்ரஜன் திரவ உர போத்தலகள் கம்பெனியின் களஞ்சியங்களிலும் ரூபா 1,423,030 ஆன 701 ∴ திரவ உர போத்தல்கள் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பெனி கனஞ்சிங்களிலும் காணப்படுவதாகவும் அந்த அனைத்து உரங்களும் 2023 நவம்பர் மாதம் அளவில் காலாவதியாக உள்ளதால் எடுத்து உள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. திரவ உர இறக்குமதியின் போது சேதங்கள் மற்றும் சிந்திய போத்தல்களின் அளவு 11 ஆக இருந்ததுடன் இறக்குமதியின் போது ஏற்பட்ட பற்றாக்குறை 07 போத்தல்கள் ஆகும் அவற்றின் பெறுமதி ரூபா 36,540 ஆக இருந்தது.

(எ) கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறை மூலம் தயாரிக்கப்பட்டு இருந்த பேரேட்டுக் கணக்குகளில் ஆரம்ப மீதி தானாக உருவாகாமை காரணமாக அம் முறைமையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பரீட்சை மீதியிலுள்ள மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஏ) 2022 பெப்ரவரி 01 ஆம் திகதிய அமப/22/0077/323/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனி என்பவற்றை இணைத்து தனியார் கம்பெனி ஒன்றாக நடாத்திச் செல்வதற்கு தேவையான கலந்துரையாடல்கள் மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் கொழும்பு கொமர்சல் உரக் கம்பனி தொடர்ந்து இயங்குதல் நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்டதுடன் கம்பனியின் ஒன்றிணைக்கும் தீர்மானம் கணக்கீட்டு குறிப்பு ஒன்றின் மூலம் அல்லது நிதிகூற்றுக்களில் வெளிப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஐ) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 15,904,111 பெறுமதியான பொதியிடல் உரைகள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டு வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கம்பெனியின் பெறுவனவு கணக்கு வைத்தல் பலவீனம் காரணமாக வங்கி கணக்கிற்கு நேரடியாக வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 942,219 தொகை உள்ளடக்கி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைத்திருந்த ரூபா 5,029,353 தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட பெறுமதிகளை இனங்கண்டு கணக்குகளுக்கு செலவு வைக்காமை காரணமாக வியாபார கடன்பட்டோர் மீதி மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(ஓ) மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வியாபார கடன்பட்டோர் மீதியான ரூபா 1,053,306,408 இற்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கடிதங்கள் மற்றும் அதன் தனியால் கடன்பட்டோர் பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை

(ஔ) நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பணிக்கொடை, வைப்புக்கள் மற்றும் மிகை பெபறுவனவு மீதியான ரூபா 178,913,393 தொகை தொடர்பான மீறி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அம்மீதில் கமநல சேவைகள் அபிவிருத்தி

திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 169,958,034 தொகைக்குரிய கமநல சேவை நிலையங்கள் இனங்காணப்பட்டு பெற வேண்டிய கடன் மீதிகள்ல் இருந்து கழிப்பதற்குப் பதிலாக பணிக்கொடை வைப்புக்கள் மற்றும் மிகை பெறுவவு கணக்கில் உள்ளடக்கப்பட்டு இருந்தது அதன் காரணமாக இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோர் மீதி சரியானது அல்ல என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

(ஃ) 23 மார்ச் 31 ல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 15,900,111 பெறுமதியான பொதியிடல் உரைகள் பகுதிகள் மெய்மையாய்வு செய்யப்பட்டு வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

(க்) 2016 ஆம் ஆண்டில் உர மானிய வழங்கள் இடைநிறுத்தப்பட்டு விவசாயிகளுக்கு பணம் வழங்கும் நடைமுறைக்கு செல்லும் உரமானிய கொள்கை மாற்றப்பட்ட காரணமாக 2016 பெப்ரவரி 29 இல் உள்ளவாறு கம்பெனியிடம் இருந்த 55,809 மெ.தொன் உரத்துக்குரிய மானிய பெறுமதியான ரூபா 2,112,468,040 தொகையை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாமல் செலுத்த வேண்டிய பெறுமதி ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கம்பெனியின் குறுங்கால கடனுக்காக வட்டி செலவினம் மற்றும் முத்திரை மற்றும் எழுது கருவி கட்டணங்களாக ரூபா 1,009,667,181 தொகையில் இருந்து செலவிடப்பட்டிருந்தது குறித்த பெறுமதியை திறைசேரிக்கு அனுப்பி வைக்குமாறு முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கை மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் கம்பெனியினால் பரிந்துரைகள் செயல்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பெறுமதி 1,102,800,859 ஆக நிதி கூற்றுகளில் நடைமுறை பொறுப் களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டில் இந்திய கடன் முறைமை அடிப்படையில் கிடைத்திருந்த 28,100 மெற்றிக் தொன் ஆன உர இருப்பு கமநல சேவை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு கிடைத்திருந்த ரூபா 2,416,052,7560 தொகையில் ரூபா 833,338,893 மாத்திரம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு ரூபா 1,552,713,863 தொகையை ஆண்டின் இறுதி வரையில் கம்பெனியின் வங்கிக் கணக்குகளில் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன.

(கா) கம்பெனிக்கு சட்ட ரீதியாக கையளிக்கப்படாத கம்பெனியின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள வத்தள ஹுனுபிட்டிய தலைமை அலுவலக காணி ரூபா 90,00,000 இற்கு பெறும இடப்பட்டு நடைமுறை அல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டமை காரணமாக நடைமுறை அல்லாச் சொத்துக்கள் அப் பெறுமான்த்தால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டு இருந்தது.

(கி) ரூபா 4,979,818 ஆன மொத்த கிரயமான மென்பொருள் முறைமையின் கணக்கீடு செய்யப்பட்டு இருந்த ரூபா 3,894,518 ஆன பெறும்தி மாத்திரம் 2022 செப்டெம்பர் 01 ஆம் திகதி வரையில் முடிவுறாத வேலை மூலதன கணக்கில் இருந்து அகற்றப்பட்டு ஆதனங்கள் பொறிகள், உபகரணங்களின் கீழ் கணனி மற்றும் அச்சிட்டு இயந்திரங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,085,300 பெறுமதி அக்கணக்கிற்கு வரவு வைக்கப்படாமை காரணமாக நடைமுறை அல்லா சொத்துக்கள் அப் பெறுமான்த்தால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது

(கீ0 மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்காக நிலுவையாக இருந்த தொலைபேசி கட்டணங்களுக்காக செலுத்திய ரூபா 172,030 ஆன தொலைபேசி கட்டணங்கள் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டமை காரணமாக மீளாய்வண்டு இலாபம் அப்பெறுமான்த்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) மீளய்வாண்டில் கம்பெனியால் அறவிடமுடியாக்கடன் ஒதுக்கமாக ரூபா 37,384,363 ஆன கடன் மீதியில் இருந்து கழித்து காண்பிக்கப்பட்டு இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 3.8 ,ல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கடன் பட்டோர் காலப்பகுப்பாய்வு ஒன்று அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் கடன்பட்டோர் மீதிகளுக்கு உரிய காலப் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளாமல் வருடக்கணக்காக இருந்து ஒரே பெறுமதி அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடாக கடன்பட்டோரிலிருந்து வரும் மீதிலியிருந்து கழித்து காண்பிக்கப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கூ) மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் பலவீனங்கள் இடம் பெற்றிருந்தன.

(i) மீளாய்வாண்டின் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த வருடாந்த பெறுமான தேய்வு பெறுமதியான ரூபா 40,324,267 இற்குப் பதிலாக தவறுதலாக காசு பாய்ச்சல் கூற்றில் ரூபா 40,58,378 ஆக உள்ளடக்கப்பட்டமை காரணமாக தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் வரும் காசு பாய்ச்சலில் காசு உட்பாய்ச்சல் ரூபா 265,889 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன் இலாபத்திற்கு நடைமுறை அல்லா சொத்துக்கள் அகற்றுதல் இலாபம் சீராக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வு ஆண்டில் ரூபா 194,329 ஆன சொத்துக்கள் அகற்றும் பெறுமதி இனங்காணப்பட்டு சீராக்கப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல் அப்பெறுமானத்தால் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) அதனங்கள், பொறிகள், உபகரணங்கள் விற்பனைக்குரிய உள்ளவாறான காசு உட்பாய்ச்சல் பெறுமதியான ரூபா 287,340 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் கீழ் கணக்கு செய்வதற்கு பதிலாக அகற்றப்பட்ட ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கிரயமான ரூபா 358,900 பெறுமதி காண்பிக்கப்பட்டமை காரணமாக ரூபா 71,560 அப் பெருமானத்தால் முதலீட்டு செயற்பாடுகளில் கீழ வரும் காசு பாய்ச்சல் உட்பாய்ச்சல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) சொத்துக்கள் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்களின் கிரயமான ரூபா 1,085,300 நடைமுறை வேலை கணக்கில் காண்பிக்கப்பட்டமை காரணமாக அதற்கு உரிய வருடாந்த பெறுமான்த் தேய்வு ரூபா 158,273 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டில் இலாபம் மற்றும் நடைமுறை அல்லா சொத்துக்கள் அப் பெறுமானத்தால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் காசு பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழான காசுப் பாய்ச்சலில் காசு உட்பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் கம்பனியின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படவில்லை அத்துடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள பெற்றுக்கொள்ளும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனையய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துகின்றதா எனக் கருத்திற் கொள்வதாகும்

கம்பனியின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான அளவில் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால் சீராக்குவதற்காக நிர்வாக தரப்பினருக்கு அவ்விடயத்தை தெரிவிக்க வேண்டும். மேலும் சீராக்காமல் தவறுதாலக காண்பிக்கப்பட்டிருந்தால் அரசியலமைப்பின் 154(6) உறுப்பியின் பிரகாரம் என்னால் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(1) ஈ) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்பட்டு கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவு படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் கம்பனியால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் கம்பனியுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

| **சட்டங்கள்,விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நி.பி 137(5) | வழுங்கல் தொடர்பான சந்தர்ப்பங்களின் அவற்றை பரீட்சித்து சரியாக பொறுப்பேற்றதாக அல்லாவிடில் அரசின் பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அல்லாவிடில் அப்பொருட்கள் தொடர்பாக பெறுமதிகள் காண்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் கம்பனியால் பீவீசீ வயர், ஒக்சிஜன், டயர் மறறும் டீசல் மாற்றுதல் போன்றவை பொருட்கள் |

| | | |
|---|---|---|
| | | கிடைப்பதற்கு முன்னர் முற்பணமாக பட்டியல் பெறுமதியான ரூபா 517,641 தொகை 05 தனியார் வழங்குனர்களுக்கு முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | நி.பி 371(2) | (i) குறித்துரைக்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்தவுடன் பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 13 உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்ப்டிருந்த ரூபா 1,460,999 ஆன செயல் நிமித்த கட்டுநிதி குறித்த செயற்பாடுகளின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) குறித்த செயற்பாடுகள் முடிவுற்ற உடனே பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்வு செய்யப்படா திருக்கையில் கம்பனியின் உதவி நிர்வாக முகாமையாளருக்கு மீண்டும் செயல்நிமித்த வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 2021/21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களில் ஒவ்வொரு அரச கம்பனியாலும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022/2023 ஆம் நிதியாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 126 நாட்கள் கடந்ததன் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன |
| (ii) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED/08/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பெனிகளின் ஊழியர்களுக்காக சேமிக்கப்பட்ட விடுமுறைகள் அடிப்படையில் படிகள் கொடுப்பனவு செய்யும் போது அக்கொடுப்பனவுகளுக்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற ஆண்டுக்கு முன்னைய ஆண்டிற்கு திறைசேரிக்கு செலுத்த வேண்டிய இலாபப்பங்கு / வரவு வரி செலுத்த வேண்டிய போதிலும் கம்பனியால் 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய பங்கிலாபத்தை செலுத்தாமல் கம்பெனியின் ஊழியர்களால் சேமிக்கப்பட்ட சிறு விடுமுறைகள் மற்றும் மருத்துவ விடுமுறைகளுக்காக ரூபா 4,113,280 கூட்டுத்தொகையான விடுமுறை படிகள் மற்றும் நிறைவேற்று தர உத்தியோகத்தர்கள் சேமித்த மருத்துவர் விடுமுறைகளுக்காக ரூபா 1,708,981 கூட்டுத்தொகையான படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2021 திசெம்பர் 15 ஆம் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கை 03/2021 | 2022 ஆம் ஆண்டிற்காக உபகார படிகள் கொடுப்பனவின் போது நிதிக்கூற்றுகள் அடிப்படையில் செலுத்த வேண்டிய போதிலும் 2020/2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை |

அதிபதி அறிக்கை 2022 திசம்பர் 14 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதும் அதற்கு முன்னர் உபகார படிகளாக ரூபா 1,660,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் அதிகாரங்கள் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

(அ) கணனி முறைமைக்கு நாட்குறிப்பு பதிவுகளை உட்படுத்தும் போது அதற்காக முறையான அங்கீகாரம் ஒன்றை பெற்றுக்கொண்டு உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. நாட்குறிப்பு பதிவுக்குரிய துணை ஆவணங்கள் நாட்குறிப்பு பதிவுகளுடன் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக குறித்த நாட்குறிப்பு பதிவு பூர்த்தி செய்யப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது

(ஆ) பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் PED/P/04/24(1) மற்றும் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கம்பனியால் வருடாந்தம் கப்பல் பொருள் இறக்குதலை துரிதப்படுத்தும் வருமானத்திலிருந்து 50 சதவீத அளவு மாத்திரம் ஊழியர்களின் செயலாற்றல் அடிப்படையில் மூன்று மாத அடிப்படை சம்பளத்திற்குச் சமமான ஆகக்கூடிய தொகைக்கு உட்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் செலுத்த வேண்டிய போதிலும் ஊழியர்களின் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவின படி ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 16,269,635 ஆக இருந்ததுடன் அடிப்படை சம்பளத்தை கணிப்பீடு செய்யும் போது செலுத்த வேண்டிய தொகை ரூபா 13,949,760 ஆக இருந்தது. ஆதன் பிரகாரம் ரூபா 2,319,875 தொகை மேற்படி கடிதத்தினால் நிபந்தனை உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED/08/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு செய்யும் போது முன்னைய ஆண்டிற்குரிய திறைசேரிக்கு செலுத்த வேண்டிய இலாபப்பங்கு செலுத்தியிருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய பங்கிலாபத்தை செலுத்தாமல் 2022 திசெம்பர் 07 ஆந் திகதி ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

(அ) இலங்கை வங்கி நடைமுறை கணக்கிலிருந்து 2022 நவம்பர் 10 ஆம் திகதி ரூபா 100,000,000 ஆன நிலையான வைப்பொன்றை ஆரம்பிப்பதற்காக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது அதன் பிரகாரம் அந் நடைமுறை கணக்கு மேலதிகபற்று மீதி ஒன்றாக மாறியமை காரணமாக அந் நிலையான வாய்ப்புக்காக செலுத்தும் வட்டியை விட 2.5 சதவீதமான கூடுதலான வட்டி ஒன்று செலுத்துவதற்கு நேர்ந்திருந்தமை கணக்காவின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மஹவலி அதிகாரசபைக்குரிய 2018/2019 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை குத்தகைக் காணியில் களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ஆரம்ப செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,732,901 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் ஏனைய செயற்திறனான நடவடிக்கையொன்றுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்படி செலவினம் விளைவற்ற செலவினமாக மாறி இருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி அனுராதபுரம் மாவட்ட மொத்த வழங்குனராக செயல்பட்ட விவசாய பயிர் செய்கையாளர் அமைப்பிற்கு கமநல சேவைகள் நிலையங்களுக்கு பகிர்ந்துரைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உர அளவில் 2006 ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் 2009 மே 25 காலம் வரை காலப்பகுதியில் உர மானியாக 7,508.45 மெற்றிக் தொன் அளவிலான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டவுடன் அந்த இருப்பு பற்றாக்குறை இன் சந்தை பெறுமதியான ரூபா 848,003,961 ஆன நட்டத்தை இதுவரை அந்த அமைப்படமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி தனியார் மயமாக்கப்பட்டு 1994 ஜூலை 29 ஆம் திகதி முதல் மீண்டும் கம்பெனி அரசினால் கையேற்கும் திகதி வரை 1997 ஜனவரி 20 ஆன காலப்பகுதியில் வெவ்வேறு 15 தனியார் நிறுவனங்களுக்காக கடன் வசதி அடிப்படையில் உரம் வழங்கப்பட்டிருந்த காரணத்தால் கணக்காய்வு தினமான 2023 செப்டம்பர் 22 ஆம் திகதி வரையிலும் மேலும் அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 22,053,338 ஆக இருந்தது. கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்கள் கம்பெனியிடம் இல்லாதிருந்ததுடன் அதன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கம்பெனி தவறு இருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டு தற்போது சேவையிலிருந்து விலகியுள்ள 06 உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது ஊழியர் கடன் மற்றும் முற்பணமாக பெற்றுக்கொண்ட கடனில் ரூபா 65,000 ஆன கடன் மீதி மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டு நலன்புரிச் சங்கத்தின் ரூபா 20,000 ஆன கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுகப்பதாக முன்னைய ஆண்டின் போது கம்பனியால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மேலும் பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) கடந்த நான்கு ஆண்டுகளில் கம்பெனியின் விற்பனைகளுக்கு ஒப்பாக விற்பனை கிரயம் 73 சதவீதத்திற்கும் 89 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதம் ஒன்றை எடுத்து இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அப்பெறுமதி 14 சதவீதமான பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது.

ஒப்பம் டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*(இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)*

**8.4 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2023 | 2022 |
|---|---|---|---|
| வருமானம் | 12 | 207,177,447 | 770,422,986 |
| விற்பனைக் கிரயம் | 13 | (29,395,165) | (561,386,808) |
| மொத்த இலாபம் (நட்டம்) | | 177,782,282 | 209,036,178 |
| ஏனைய வருமானம் | 14 | 83,011,716 | 36,752,312 |
| | | 260,793,998 | 245,788,490 |
| நிர்வாகச் செலவினங்கள் | 15 | (128,074,102) | (114,171,605) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | 16 | (751,203) | (2,973,754) |
| ஏனைய செலவினம் | 17 | (692,404) | (156,408) |
| செயற்பாட்டிலான இலாபம் | | **131,276,289** | **128,486,722** |
| தேறிய நிதிக் வருமானம் | 18 | 369,867,507 | 105,668,100 |
| நிதி வருமானம் | 18.அ | (397,375,941) | (124,749,394) |
| நிதி செலவினம் | 18.ஆ | 27,508,434 | 19,081,294 |
| **வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | | **501,143,796** | **234,154,823** |
| வருமான வரிச் செலவினம் | 19 | (139,948,197) | (73,327,093) |
| **வருடத்திற்கான தேறிய இலாபம்** | | **361,195,599** | **160,827,729** |
| **தலா ஒரு பங்கிற்கான உழைப்பு** | 20 | 36.12 | 16.08 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | 7,959,181 | (1,293,656) |
| **ஆண்டிற்கான முழு மொத்த வருமானம்** | | **369,154,780** | **159,534,073** |

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

**8.5** *(இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)*

**2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2022/2023<br>ரூபா. | 2021/2022<br>ரூபா. |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் | 21 | 525,838,827 | 561,602,670 |
| சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை | 22 | 16,842,313 | 20,928,297 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள | 23 | 1,833,333 | 196,920 |
| மூலதன நடைபெறும் வேலை | 24 | 4,837,791 | 10,397,009 |
| | | **549,352,264** | **593,124,896** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்களும் ஏனைய நுகர்வுப் பொருட்களும் | 25 | 54,581,256 | 45,417,233 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 26 | 17,935,343,439 | 19,385,590,802 |
| ஊழியர் கடன்களும் முற்பணமும் | 27 | 17,056,510 | 15,066,064 |
| வைப்புக்களும் முற்பணமும் | 28 | 4,968,626 | 5,522,914 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 29 | 2,520,635,971 | 2,209,998,928 |
| வங்கியில் காசு | 30 | 42,983,959 | 37,931,867 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **20,575,569,760** | **21,699,527,807** |
| **மொத்த சொத்துக்கள்** | | **21,124,922,024** | **22,292,652,703** |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 31 | 100,000,000 | 100,000,000 |
| மூலதன ஒதுக்கம் | 32 | 1,683,685 | 1,683,685 |
| மீள்நிர்மாணம் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 33 | 712,721,831 | 712,721,831 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 2,617,873,151 | 2,261,344,137 |
| | | **3,432,278,667** | **3,075,749,653** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 34 | 17,046,187 | 24,774,540 |
| பிற்போடப்பட்ட வரி | 35 | 134,666,957 | 113,343,381 |
| கடன்களுக்கான வட்டி | 36 | 5,555,353,975 | 14,330,338,918 |
| நீண்டகால குத்தகை பொறுப்பு | 37 | 1,351,816 | 4,775,801 |
| | | **5,708,418,936** | **14,473,232,640** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்களுக்கான வட்டி | 36 | 8,622,758,030 | 1,628,540,000 |
| குறுங்கால குத்தகை பொறுப்பு | 37 | 3,423,985 | 3,423,985 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | 38 | 2,836,730,396 | 2,875,942,204 |
| வைப்புக்களும் கிடைக்கப்பெற்ற முற்பணமும் | 39 | 185,112,237 | 14,715,440 |
| சட்டரீதியான கொடுப்பனவு | 40 | 170,422,583 | 104,341,733 |
| அட்டுறு செலவினம் | 41 | 100,929,457 | 6,526,164 |
| வங்சி மிகைப்பற்று | 30 | 64,847,733 | 110,180,883 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **11,984,224,421** | **4,743,670,410** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **21,124,922,024** | **22,292,652,703** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………
நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்
எஸ்என்.ஜே.விக்ரமசிங்ஹ

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிபதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபையின் உடையதாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டது.

……………………………… ………………………………
**தலைவர்** **பணிப்பாளர்**
கலாநிதி திரு. ஜகத் பெரேரா கே.ஜி.பி. புஷ்ப குமார

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

**8.6**

*(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2023 மார்ச் இல் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்**
**உரிமை மாற்றல் கூற்று**

| | பங்கு மூலதனம் | மூலதன ஒதுக்கீடு | மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **31-03-2021** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **712,721,831** | **2,196,038,356** | **3,010,371,552** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/நட்டம | - | - | - | 159,534,072 | 159,534,072 |
| பங்கிலாபம் | - | - | - | - | - |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | - | - | (94,228,292) | (94,228,292) |
| **31-03-2022** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **712,721,831** | **2,261,344,137** | **3,075,677,332** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/நட்டம | - | - | - | 369,154,780 | 369,154,780 |
| பங்கிலாபம் | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | - | - | (2,625,766) | (2,625,766) |
| **31-03-2023** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **712,721,831** | **2,617,873,151** | **3,432,206,346** |

(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழித்தலை குறிக்கின்றன)

*(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்**

**8.7 காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 2023 | 2022 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 501,143,796 | 234,154,823 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள | | |
| ***சீராக்கங்கள்*** | | |
| பெறுமானத்தேய்வு | 40,058,378 | 41,824,555 |
| தொட்டுணர முடியாத சொத்துக்களுக்கு காலக்கழிவு | 1,113,587 | 196,920 |
| குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் தேய்மானம் | 4,085,984 | 4,085,984 |
| ஆண்டிற்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,349,441 | 3,202,232 |
| வட்டி வருமானம் | (397,375,941) | (124,749,394) |
| குத்தகைக்கான வட்டி செலவுகள் | 886,499 | 1,311,271 |
| முன்னைய ஆண்டின் சீராக்கம | (2,625,766) | (94,228,292) |
| **தொழிற்படு மூலதன அசைவுகளுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **151,635,977** | **65,798,099** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புக்கள் | (9,164,023) | 199,219,156 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 1,450,247,363 | (2,096,314,064) |
| வைப்புக்களும் முற்பணமும் | 554,288 | 2,930,349 |
| ஊழியர் கடன்களும் முற்பணமும் | (1,990,446) | 826,826 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | (39,211,808) | (1,777,871,559) |
| வைப்புக்களும் கிடைக்கப்பெற்ற முற்பணமும் | 170,396,797 | (8,134,913) |
| அட்டுறு செலவினங்களுளும் ஏற்பாடுகளும் | 94,403,293 | (3,238,836) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு** | **1,816,871,441** | **(3,616,784,942)** |
| பணிக்கொடை கொடுப்னவு | (4,118,613) | (2,248,555) |
| வட்டி செலுத்தப்பட்டது | (886,499) | (1,311,271) |
| வரிக் கொடுப்பனவு | (52,543,771) | (59,906,480) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு** | **1,759,322,559** | **(3,680,251,248)** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கையேற்பு | (4,653,435) | (173,230) |
| செயல்பாட்டு மூலதனத்தின் மீதான முதலீட்டை அதிகரித்தல் | 5,559,218 | - |
| அசையா சொத்துக்களை கையகப்படுத்துதல் | (2,750,000) | - |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் | 358,900 | - |
| வட்டி ரசீதுகள் | (310,637,043) | (32,656,534) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகும் பணப்புழக்கம் | 397,375,941 | 124,749,394 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய காசு** | **85,253,581** | **91,919,630** |
| **நிதியீட்ட நடவடிக்கைளினால் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆண்டில் செலுத்தப்பட்ட ஈவுத்தொகை | (10,000,000) | - |
| குத்தகை பொறுப்பு மீள் கொடுப்பனவு | (3,423,985) | (2,999,213) |
| ஆண்டின் போதான கடன் எடுப்பனகள் | 8,311,911,443 | 5,111,366,454 |
| ஆண்டின் போதான கடன் தீர்ப்பனவுகள் | 10,092,678,355) | (1,628,540,000) |
| **நிதியீட்ட நடவடிக்கைளினால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(1,794,190,897)** | **3,479,827,241** |
| **ஆண்டின் போதான காசு மற்றும் அதற்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு** | 50,385,243 | (108,504,378) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமமானவைகள் | (72,249,016) | 36,255,361 |
| **வருட இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமமானவைகள்** (குறிப்பு) **30** | **(21,863,774)** | **(72,249,016)** |

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

**1. கூட்டமைப்புத் தகவல்**

**1.1 அறிக்கையிடல் நிறுவனம்**

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி, (“கம்பனி” யானது) 1989 ஒட்டோபர் 04 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்டு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2011 யூலை 15 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு இலங்கையில் நிலையகமுற்று இலங்கை அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் கம்பனியின் வணிக இடமும் “ஹுணுப்பிட்டிய, வத்தளையில் அமைந்துள்ளது.

**1.2 கம்பனி**

கம்பனி ஆரம்பத்தில் நெல், தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிற பயிர்களுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்தல், கலத்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்தது.

**1.3 நிதியாண்டு**

கம்பனியின் நிதி அறிக்கைக் காலப்பகுதி மார்ச் 31 அன்று முடிவடைகின்றது.

**1.4. வழங்கலுக்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி**

கம்பனிப் பணிப்பாளர்கள் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பொறுப்பானவர்கள். கம்பனியின் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 நவம்பர் 28 ஆம் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி வழங்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டது.

**1.5 ஊழியர்களின் எண்ணிக்கை**

கம்பனி ஊழியர்களின் எண்ணிக்கை

| 31 மார்ச் 2023 | | 31 மார்ச் 2022 | |
|---|---|---|---|
| • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 17 | • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 19 |
| • எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் இணைந்த | 97 | • எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் இணைந்த | 98 |
| • தொழிலாளர் | 8 | • தொழிலாளர் | 09 |
| | 122 | | 126 |

**2. தயாரிக்கும் அடிப்படை**

**2.1 இணக்கக் கூற்று**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (CASL) விநியோகிக்கப்பட்ட (SLFRS எனக் குறிப்பிடப்படும்) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் படியும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டு அடிப்படை**

நிதி நிலைமைக் கூற்றின் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- காணி கட்டிடங்கள் 2019.03.31 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இலாப நட்டங்களின் ஊடாக நியாயப் பெறுமதியிலான நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.
- வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு உள்ளபடி பெறுமதியிடப்பட்டு வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

**2.3 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்**

கம்பனியின் செயற்பாட்டு நாணயமாகவும் நிறுவகம் செயற்படும் அடிப்படைப் பொருளாதாரச் சூழலில் பயன்படுத்தப்படுமான இலங்கை ரூபா (இலரூபா) இல் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்படும் சகல இலங்கை நிதித் தகவல்களும் வேறாக எடுத்துரைக்கப்பட்டால் அன்றி கிட்டிய ரூபா பெறுமதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்வுகள் மற்றும் எதிர்வுகூறல்கள்**

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தில் தாக்கம் செலுத்துவனவற்றிற்கு முகாமைத்துவம் மதிப்பீடுகள், தீர்வுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றது. இம் மதிப்பீடுகளினின்றும் உள்ளபடியான விளைவுகள் வேறுபடக்கூடியன. ஓர் தொடர் அடிப்படையில் மதிப்பீடுகளும்

எதிர்வுகூறல்களும் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீட்பு, மதிப்பீடுகள் மீட்கப்பட்ட காலப்பகுதிக்கும் தாக்கமளிக்கும் ஏதேனும் எதிர்காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரண மீள்மதிப்பீடு**

கம்பனி அதன் காணியை ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயப் பெறுமதியிலான மாற்றங்களுடன் மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகளில் வெளிப்படுத்துகின்றது. அரசாங்க மதிப்பீட்டாளரை கம்பனி ாடுபடுத்தி 2019.03.31 இல் உள்ளவாறான நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கின்றது. மேலும் காணியின் விபரங்கள் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது.

**2.4.2 நிதியல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு.**

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமதி அல்லது பண மீட்டல் அலகு அதன் அறவீட்டுத் தொகையை மிகைக்குமாயின் அதன் நியாயப் பெறுமதி விற்பனைக் கிரயத்திலும் அதன் பயன்பாட்டுப் பெறுமதியும் அதிகரிக்குமாயின் சேத இழப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. நியாய பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயங்கள் கழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கணிப்பீடு, சொத்துக்களின் அகற்றலுக்காக பெருகும் கிரயங்களை அவதானிக்கப்பட்ட சந்தை விலைகளிலிருந்து கழித்து அல்லது அதே சொத்துக்களின் கைக்கெட்டிய கொடுக்கல் வாங்கல்களிலான விற்பனைக்கு கொடுக்கல் வாங்கல்களையும் பிணைப்பதிலிருந்தான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. பயன்பாட்டுப் பெறுமதிக் கணிப்பீடு கழிவுக் காசுப்பாய்ச்சல் முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**2.4.3 ஓய்வூதிய நலன்கள்**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தின் கிரயம் உள்ளபடியான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளபடியான விருத்திகளிலிருந்து மாறுபடக்கூடிய பல்வேறு ஊகங்களைக் கொண்டு உள்ளபடியான பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை கழிவு விகிதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் இறப்பு விகிதங்களின் நிர்ணயிப்புக்களை உள்ளடக்கியுள்ளன. மதிப்பீட்டின் சிக்கல் நிலை காரணமாகவும் அடிப்படை ஊகங்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால இயல்பு, ஓர் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு இம் மாற்றங்களிற்கு மிகவும் உணர்திறன் வாய்ந்தவையாகும். சகல ஊகங்களும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போது மீளாய்வு செய்யப்படுகின்றன.

**2.4.4 நிதிசார் கருவிகளின் நியாயப் பெறுமதி**

நிதி நிலைமைக் கூற்றில் பதியப்படும் நிதிசார் சொத்துக்களினது நிதிசார் பொறுப்புக்களினதும் நியாயப் பெறுமதி சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத போது அவற்றின் நியாயப் பெறுமதி கழிவுக் காசுப்பாய்ச்சல் முறை உட்பட மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. இம் முறைமைகளுக்கான உள்ளீடுகள் இயலுமான போது அவதானிப்புச் சந்தைகளில் இருந்து பெறப்படுகின்ற போதிலும் இயலாத போது நியாயப் பெறுமதியை ஏற்படுத்துவதற்கு நியாயப்பாடு தேவைப்படுகின்றது. திரவ இடர், கடன் இடர் மற்றும் ஏற்ற இறக்கம் போன்ற உள்ளீடுகளின் பரிசீலனைகளும் இந் நியாயங்களில் உள்ளடங்கும். இக் காரணிகள் குறித்த ஊகங்களின் மாற்றங்கள் அறிக்கையிடப்பட்ட நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியைப் பாதிக்கின்றன.

**3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ள சகல காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1 அந்நிய செலாவணி**

**3.1.1 அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல் மீதிகள்**

அந்நிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் அவை முதற்தடவையாக அங்கீகரிக்கப்படும் திகதியில் நிலவும் செயற்படு நாணயப் புள்ளி விகிதத்தில் கம்பனியால் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக வகுக்கப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவும் எதிர்பார்க்கப்படும் அந்நிய செலாவணி, அறிக்கையிடல் திகதியிலான பரிவர்த்தனைக்கு நடைமுறை நாணய புள்ளி விகிதத்தில் மீள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. நாணய விடயங்களின் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது தீர்வுகளின் மீது ஏற்படும் இலாப நட்ட வேறுபாடுகள் அனைத்தும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

காலக் கழிவு கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பிலான பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

**3.2 ஆதனம், பொறி மற்றும் கருவிகள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக

நோக்கங்களுக்காகவும் ஒரு வருட காலத்திற்கு மேலான காலத்திற்காகப் பயப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் மதிப்பீடப்பட்டு காணி நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

**3.2.1 ஏற்பிசைவின் அடிப்படை**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சொத்துக்களுடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்குள் பாய்ச்சப்படும் இயலுமையும் சொத்தின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்படக் கூடியவிடத்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.2 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் உள்ளடங்கலாக குறித்த பாவனைக்குத் தயாரான நிலைக்கு கொண்டுவரப்படும் வரையில் ஏற்பட்ட அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கியதாகக் கணிப்பிடப்படும்.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயத்தில் பொருட்களின் கிரயம் மற்றும் நேர் ஊழியம், அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் மற்றும் பொருட்கள் கழற்றப்பட்டு, அகற்றப்பட்டு அவை இருக்க வேண்டிய இடங்களில் மீளப் பொருத்தப்படுவதற்கான கிரயங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

**3.2.3 தொடர்ந்து வரும் கிரயங்கள்**

செலவினங்களுடன் தொடர்புற்ற எதிர்காலப் பொருளாதார நலங்கள் கம்பனிக்குப் பாய்ச்சப்படுவதற்கான வாய்ப்புக் குறைகையில் மாத்திரமே தொடர்ந்துவரும் செலவினங்கள் மூலதனமாக்கப்படுகின்றன. தற்போதுள்ள பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புக்கள் ஏற்கப்பட்ட செலவினங்களாகக் கருதப்படுகின்றன.

**3.2.4 மீள்மதிப்பீட்டு மாதிரி**

கம்பனி சகல இறையில் காணி கட்டிடங்களிற்கும் மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பிரயோகிக்கின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2019.03.31 ஆம் திகதியான மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதியில் இருந்து ஏதேனும் தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் தொடர்ந்துவரும் சேத இழப்புகளும் கழிக்கப்பட்டு அவை பெறுமதியிடப்பட்டுள்ளன.

கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2012 மார்ச் 31 இற்கு முன்னரான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

**3.2.5 கிரய மாதிரியைத் தேர்வு செய்தல்**

கம்பனியின் காணி கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (தயவு செய்து தொடர்பு இல 9.3 – பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

**3.2.6 குறை ஏற்பிசைவு (derecognition)**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஓர் விடயத்தின் கொண்டு செல்லல் தொகை அகற்றலின் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நலன்கள் இல்லாத போது குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஒரு விடயம் குறை ஏற்பிசைவு செய்யப்படுகையில் குறை ஏற்பிசைவின் மூலம் பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஓர் விடயத்தின் பதிலீட்டுக் கிரயங்கள் கொண்டு செல்லல் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படுகையில் பதிலீடு செய்யப்பட்ட தொகையில் எஞ்சிய கொண்டுசெல்லல் தொகை குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**3.2.7 பெறுமானத்தேய்வு**

ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு ஆயத்தமானதிலிருந்து ஆரம்பமாகின்றது. அதாவது, முகாமைத்துவத்திற்குத் தேவையான வகையில் செயற்பாட்டிற்கு உரித்தாக தேவையான நிலையில் குறித்த இடத்தில் உள்ளபோதாகும். சொத்தொன்று விற்பனைக்காக உள்ள திகதி அல்லது சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட திகதி இவற்றில் முந்நிய திகதியில் இருந்து ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வீடு நிறைவு பெறும் சொத்தொன்று விளைவற்றுள்ளபோதோ அல்லது முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டாலன்றி அதன் செயற்படு பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டாலோ பெறுமானத்தேய்விலிருந்து நிறைவுற மாட்டாது.

காணி பெறுமானத்தேய்விடப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு பின்வரும் வீதங்களில் கம்பனியால் நுகரப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் சொத்துக்களின் எதிர்காலப் பொருளாதார

நலன்களின் வடிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு உரித்தான காலப்பகுதிகளுக்காக நேர் முறையில் கணிப்பிடப்படுகின்றன.
அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் போதும் மீளாயப்படுகின்றன. நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதியின் போதான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 ஆண்டுகள் |
| இயந்திர உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுகள் |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள | 10 ஆண்டுகள் |
| வேலைத்தள உபகரணங்கள | 05 ஆண்டுகள |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 05 ஆண்டுகள |
| கணனி பகுதிகள | 05 ஆண்டுகள |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கையில ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகை உடனடியாக அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

**3.2.8 அருவகச் சொத்துக்கள்**

கையேற்கப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் இயக்க முறைமை குறிப்பிட்ட மென்பொருள் மற்றும் அமைப்புகளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்படும் செலவின் அடிப்படையில் மூலதனமாக்கப்பட்டுள்ளது. கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்களின் கிரயத்தைக் கழித்து திரட்டிய காலக்கழிவு மற்றும் திரட்டிய நட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறைத்துக் காட்டப்பட்ட கடன்தொகை மற்றும் திரட்டிய இழப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த கிரயங்கள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்படு காலத்தின் பிரகாரம் பின்வருமாறு கழிவு செய்யப்படும்.

கணனி மென்பொருள் 03 ஆண்டுகள்

கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களை பராமரிக்கும் செலவினங்கள் கிரயமாக இனங்காணப்படுகின்றது.

**3.2.9 நிதிசாரா சொத்துக்களின் சேத இழப்பு**

